**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமக விழாவின் போது 30 நாட்கள் அரசு பொருட்காட்சி நடத்தியதற்கு ரூ.66,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1D) எண்.43

நாள் : 12–07–2016
துன்முகி, ஆனி 28,
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.23, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(பொருட்காட்சி)த் துறை, நாள் 02–02–2016.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் ந.க.எண்.1657/பு.இ.அ/2016, நாள் 11.4.2016.

–––––––

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பிப்ரவரி 2016ம் மாதத்தில் கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமக விழாவின் போது 30 நாட்களுக்கு அரசுப் பொருட்காட்சி நடத்த நிர்வாக அனுமதி அளித்து 27 துறைகளுக்கும் தலா ரூ.66,000/– வீதம் மொத்தம் ரூ.17,82,000/– அனுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளது. இதில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கும் ரூ.66,000/– செலவினம் மேற்கொள்ள அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தஞ்சாவூர் மாவட்டத்தில், கும்பகோணம் மகாமக விழாவினை முன்னிட்டு 13.2.2016 முதல் 12.3.2016 வரையிலான 30 நாட்களுக்கு மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பாக பொருட்காட்சி அரங்கு அமைத்து பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது என்றும், மேற்படி கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமக விழாவின் போது 30 நாட்களுக்கு அரசு பொருட்காட்சி அமைத்த செலவினத் தொகையாக ரூ.66,000/– நிதி ஒதுக்கீடு வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்று, கும்பகோணம் மகாமக விழாவினை முன்னிட்டு 13.2.2016 முதல் 12.3.2016 வரையிலான 30 நாட்களுக்கு மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பாக பொருட்காட்சி அரங்கு அமைத்து பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டதற்கான செலவினத் தொகை

ரூ.66,000/– (ரூபாய் அறுபத்து ஆறாயிரம் மட்டும்)க்கு நிதி ஒப்பளிப்பு செய்து மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

4. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:–

"2235–சமூக பாதுகாப்பும் நலனும்–02. சமூக நலன் –001 நெறிப்படுத்தலும் நிருவாகமும்–I திட்டத்தில் சேராதது AF. மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகம்–08. விளம்பரமும் பிரச்சாரமும்–02. பொருட்காட்சி".
(த.தொ.கு. 2235 02 001 AF 0821)

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.37037/நிதி(சந)/2016, நாள் 08.07.2016ன் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது .

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்,தஞ்சாவூர். (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
முதன்மை மாநில கணக்காயர்,சென்னை–18 (பெயரில்)
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–35.
**நகல்:–**
நிதி (சந)/(வ.செ.பொ. II)த் துறை, சென்னை–9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொருட்காட்சி)த் துறை, சென்னை–9.
மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.